بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ

# ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத் தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் *01/01/2021* அன்று இஸ்லாமாபாதிலுள்ள முபாரக் பள்ளிவாசலில் ஆற்றிய ஜுமுஆ பேருரையின் சுருக்கம்

## ஹஸ்ரத் அலீ பின் அபீதாலிப் (ரலி) அவர்களைப் பற்றிய நற்குறிப்பு

أَشْهَدُ أَنْ لَّا إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ - أَمَّا بَعْدُ فَأَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ - بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ ۝ اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ ۝
اَلرَّحْمٰنِ الرَّحِيْمِ ۝ مٰلِكِ يَوْمِ الدِّيْنِ ۝ إِيَّاكَ نَعْبُدُ وَإِيَّاكَ نَسْتَعِيْنُ ۝ اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ ۝ صِرَاطَ الَّذِيْنَ أَنْعَمْتَ عَلَيْهِمْ ۙ غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ ۝

ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்களைப் பற்றிய நற்குறிப்பு நடைபெற்று வருகின்றது.

**ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்களின் உயிர்த் தியாகம் தொடர்பாக கூறுகின்றார்கள்:** விவகாரங்கள் முழுமையாக தீர்க்கப்பட்டிருக்கவில்லை. அந்நிலையில் எத்தனை பெரிய மனிதர்கள் இருக்கின்றார்களோ அவர்களை கொலை செய்து இந்த குழப்பத்தை தீர்க்க வேண்டும் என்று காரிஜ்கள் - வெளியேறியவர்கள் தங்களுக்குள் ஆலோசனை செய்தனர். எனவே அவர்களுள் வீரமிக்க மனிதர்கள், அவர்களில் ஒருவர் ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்களையும் ஒருவர் ஹஸ்ரத் முஆவிய்யா (ரலி) அவர்களையும் ஒருவர் அம்ர் பின் ஆஸ் அவர்களையும் ஒரே நாளில் ஒரே நேரத்தில் கொலை செய்து விடுவார் என்று உறுதிமொழி எடுத்துக் கொண்டனர்.

ஹஸ்ரத் முஆவியாவை நோக்கி சென்றவன் அவர்கள் மீது தாக்குதல் நடத்தினான். ஆனால், ஹஸ்ரத் முஆவியா அவர்கள் சாதாரண காயமுற்றார்கள். அவன் பிடிபட்டு பின்னர் கொல்லப்பட்டு விட்டான். அம்ர் பின் ஆஸ் அவர்களை கொலை செய்ய சென்றவனும் தோல்வியுற்றான். ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்களை கொலை செய்வதற்கான சென்ற மனிதன், அன்னார் சுபுஃஹ் தொழுகைக்காக நிற்க முற்பட்டபோது அன்னார் மீது தாக்குதல் தொடுத்தான். அன்னாருக்கு மிகவும் அபாயகரமான காயங்கள் ஏற்பட்டன.

ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்களின் உயிர்த்தியாகம் தொடர்பாக ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களே முன்னறிவிப்பு செய்திருந்தார்கள். ஹஸ்ரத் உபைதுல்லாஹ் (ரலி) அவர்கள் கூறுகிறார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்களிடம் அலீயே! முன்னவர்களில் மிகவும் தீய மனிதன், ஹஸ்ரத் சாலிஹ் (அலை) அவர்களின் ஒட்டகத்தின் கால்களை வெட்டியவன் ஆவான். அலியே! உம்மீது ஈட்டியால் குத்துபவன் பின்னர்வர்களில் மிகவும் துர்பாக்கியம் கொண்ட மனிதனாக இருப்பான் என்று கூறினார்கள். மேலும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், எங்கு ஈட்டியால் குத்தப்படுமோ அந்த இடத்தையும் சைகை செய்து காட்டினார்கள்.

ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்களின் மரணம் நெருங்கியபோது அன்னார் உயில் ஒன்றை எழுதினார்கள்:- பிஸ்மில்லாஹிர் ரஹ்மானிர் ரஹீம். இது அலீ பின் அபீ தாலிப் செய்த வஸிய்யத் ஆகும். நான் சாட்சியம் வழங்குகின்றேன். அல்லாஹ்வைத் தவிர வணக்கத்திற்குரியவன் வேறு யாருமில்லை. மேலும் ஹஸ்ரத் முஹம்மது ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் அவனுடைய அடியாரும் தூதரும் ஆவார்கள். ஹஸனே! நான் உமக்கும், எனது அனைத்துப் பிள்ளைகள் மற்றும் குடும்பத்தின் அனைத்து உறுப்பினர்களுக்கும் அல்லாஹ்வுக்கு அஞ்சுமாறு வலியுறுத்துகிறேன். அவன் உங்களை பரிபாலிப்பவன். நீங்கள் இஸ்லாத்தின் நிலையிலேயே இந்த உலகத்தை விட்டு செல்ல வேண்டும். நீங்கள் அனைவரும் அல்லாஹ்வின் கயிற்றை உறுதியாக பற்றிப் பிடித்துக் கொள்ள வேண்டும். உங்களுக்குள் பிரிவினை செய்யக் கூடாது. ஏனென்றால், அபுல் காஸிம் (ஸல்) அவர்களிடமிருந்து நான்

இவ்வாறு கேட்டுள்ளேன். அதாவது, தங்களுக்குள் சீர்திருத்தம் செய்து கொள்வது நஃபிலான தொழுகைகள் மற்றும் நோன்புகளை விட சிறந்ததாகும்.

ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்: இது மிக முக்கியமான விஷயமாகும். இதனை நினைவில் கொள்ள வேண்டும். **தங்களுக்கிடையிலான தொடர்பை சீர்திருத்தம் செய்வது நஃபிலான தொழுகைகள் மற்றும் நோன்புகளை விட சிறந்ததாகும்.** நீங்கள் உங்களது உறவினர்களை கருத்தில் கொள்ளுங்கள். அவர்களுடன் நல்ல முறையில் நடந்து கொள்ளுங்கள். அதனால் அல்லாஹ் உங்களின் கணக்கின் மீது எளிமையை ஏற்படுத்தி விடுவான். அனாதைகளின் விவகாரத்தில் அல்லாஹ்விற்கு அஞ்சிக் கொண்டிருங்கள். அண்டை அயலாருக்கான உரிமைகள் தொடர்பாக அல்லாஹ்வுக்கு அஞ்சுங்கள். ஏனென்றால் நீங்கள் உங்களது அண்டை அயலார்களின் உரிமைகளை செலுத்தி வாருங்கள் என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் வலியுறுத்தியுள்ளார்கள். தொழுகை விவகாரத்தில் அல்லாஹ்வுக்கு அஞ்சுங்கள். ஏனெனில், இது உங்களது மார்க்கத்தின் தூண் ஆகும். உங்களின் இறைவனின் இல்லம் தொடர்பாகவும் அல்லாஹ்வுக்கு அஞ்சுங்கள். வாழ்நாள் முழுவதும் அதை காலி ஆக விடாதீர்கள். ஏனெனில் அதனை நீங்கள் காலியாக விட்டு விட்டால் அதைப்போன்ற இல்லம் ஒன்று உங்களுக்கு கிடைக்காது. உங்களது உயிரைக் கொண்டும் செல்வத்தைக் கெண்டும் ஜிஹாத் செய்யுங்கள். ஸக்காத் தொடர்பாக அல்லாஹ்வுக்கு அஞ்சுங்கள். ஏனென்றால் அது இறைவனின் கோபத்தை தணிக்கின்றது.

யாசிப்பவர்கள் மற்றும் ஏழைகள் தொடர்பாகவும் அல்லாஹ்வுக்கு அஞ்சுங்கள். உங்களது வாழ்வியல் பொருட்களில் அவர்களையும் சேர்த்துக் கொள்ளுங்கள். தொழுகையை பாதுகாத்துக் கொள்ளுங்கள். அல்லாஹ்வின் திருப்தியைப் பெறுவதற்காக குற்றம்சாட்டுபவரின் எந்த குற்றச்சாட்டிற்கும் அஞ்சாதீர்கள். அல்லாஹ் உங்களுக்கு கட்டளை வழங்கியதுபோன்று மக்களிடம் நன்மையான காரியங்களைப் பேசுங்கள். **நன்மையை ஏவுகின்ற மற்றும் தீமையைத் தடுக்கின்ற பணிகளை விட்டு விடாதீர்கள்.** இல்லையென்றால் உங்களில் மோசமானவர் உங்களுக்கு ஆட்சியாளராகி விடுவார். பின்னர் நீங்கள் துஆ செய்தாலும் உங்களது துஆக்கள் ஒப்புக் கொள்ளப்படாது. ஒருவர் மற்றவரோடு தொடர்பு வையுங்கள். சிரமப்படாமல் ஒருவர் மற்றவருக்கு உதவுங்கள். எச்சரிக்கை! ஒருவர் மற்றவரோடு பகைமையையும் அதிகரிக்காதீர்கள். உறவுகளையும் முறித்து கொள்ளாதீர்கள். பிரிவினை ஏற்படுத்திக் கொள்ளாதீர்கள். நன்மை மற்றும் இறையச்சத்தில் ஒருவர் மற்றவருக்கு உதவுங்கள். பாவம் மற்றும் கிளர்ச்சியில் உதவாதீர்கள். அல்லாஹ்வுக்கு அஞ்சுங்கள். நிச்சயமாக! அல்லாஹ் கடுமையாக தண்டனை அளிப்பவன் ஆவான்.

ஹஸ்ரத் அலீ பின் அபீ தாலிப் அவர்களின் மரணம் நிகழ்ந்த பிறகு ஹஸ்ரத் ஹஸன் பின் அலீ அவர்கள் மேடையின் மீது ஏறி நின்றார்கள். மேலும் கூறினார்கள்: மக்களே! இன்று இரவு எப்படிப்பட்ட ஒரு நபரின் மரணம் நிகழ்ந்துள்ளது என்றால், இதற்கு முன் சென்ற மக்களில் எவரும் அவரை முந்த முடியாது. பின்னர் வரக்கூடிய நபர்களில் எவரும் அன்னாரின் அந்தஸ்தை அடைய முடியாது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், அன்னாரை ஒரு திட்டத்திற்காக அனுப்பி வைக்கும்போது வலப்புறம் ஜிப்ரீல் (அலை) அவர்களும், இடப்புறம் மீக்காயீல் (அலை) அவர்களும் இருந்து வந்தார்கள். அன்னாருடைய கரத்தில் அல்லாஹ் வெற்றியை வழங்காதவரை அன்னார் திரும்பி வந்தது கிடையாது. 4 ஆண்டுகளும் எட்டரை மாதங்களும் அன்னாரின் கிலாஃபத் காலகட்டம் நிலைபெற்றிருந்தது.

ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்கள் பல்வேறு தருணங்களில் 8 திருமணங்கள் செய்தார்கள். அவர்கள் மூலம் அல்லாஹ் அன்னாருக்கு பெரும் சந்ததிகளை வழங்கினான். அவர்களின் எண்ணிக்கை 30 ஐ விட அதிகமாகும். ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: மக்களில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு மிகவும் அன்பிற்குரியவர்கள் ஹஸ்ரத் ஃபாத்திமா (ரலி) மற்றும் ஹஸ்ரத் அலீ (ரலி) ஆவார்கள்.

ஹஸ்ரத் சஃஹலபா பின் அபீ மாலிக் அவர்கள் அறிவிக்கின்றார்கள்: ஒவ்வொரு போர்க்களத்திலும் போருக்கான நேரம் வரும் போது ஹஸ்ரத் அலீ பின் அபீ தாலிப் அவர்கள் கொடியை பெற்றுக் கொள்வார்கள். ஹஸ்ரத் இப்னு அப்பாஸ் அவர்கள் அறிவிக்கின்றார்கள்: நீர் எமது சகோதரரும், எமது தோழரும் ஆவீர் என்று ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்களிடம் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

ஹஸ்ரத் அனஸ் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: சுவர்க்கம் மூன்று நபர்களுக்காக ஆர்வம் கொண்டுள்ளது என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள். அந்த மூன்று நபர்கள் அலீ (ரலி), அம்மார் (ரலி) மற்றும் சல்மான் (ரலி) ஆகியோர் ஆவர். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: சுவர்க்கத்தில் எந்த அந்தஸ்தில் நான் இருப்பேனோ அதில் அலியும், ஃபாத்திமாவும் இருப்பார்கள். 'அஷ்ரா முபஷ்ஷிரா' அதாவது, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தமது நாவினால் சுவர்க்கத்திற்கு நற்செய்தி வழங்கிய சஹாபாக்களில் ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்களும் ஒருவர் ஆவார்கள். மீதம் இனி வருங்காலங்களில் எடுத்துக் கூறப்படும். இன்ஷா அல்லாஹ்!

ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்: தற்போது நான் மற்றொரு விஷயத்தையும் கூற விரும்புகின்றேன். இன்று புதிய ஆண்டின் முதலாவது நாளாகும். மேலும் முதல் ஜுமுஆவாகும். இந்த ஆண்டு ஜமாஅத்திற்கும் உலகத்திற்கும் மனித குலத்திற்கும் பரக்கத்திற்குரியதாக அமைய துஆ செய்யுங்கள். நாமும் நமது கடமைகளை ஆற்றியவாறு முன்பை விட அதிகமாக இறைவனின் முன்னால் குனியக்கூடியவர்களாக ஆக வேண்டும். மேலும் நமது இறைவணக்கத்தின் தரத்தை உயர்த்தக்கூடியவர்களாக இருக்க வேண்டும். உலகவாதிகளும் தமது படைப்பின் நோக்கத்தை புரிந்தவாறு அல்லாஹ்விற்குரிய உரிமையை வழங்கக்கூடியவர்களாக ஆகிவிட வேண்டும். ஒருவர் மற்றவரின் உரிமையை பறிப்பவர்களாக ஆகுவதற்கு பகரமாக அல்லாஹ்வின் கட்டளைகளின்படி நடந்து ஒருவர் மற்றவரின் உரிமைகளை வழங்குபவர்களாக ஆக வேண்டும். அவ்வாறில்லையென்றால் அல்லாஹ் மீண்டும் தனது வழிமுறைக்கேற்ப உலகவாதிகளுக்கு அவர்களின் கடமைகளின் பக்கம் கவனமூட்டுகின்றான். அந்தோ! நாமும் உலகத்தின் அனைத்து மக்களும் இந்த முக்கிய கருத்தை புரிந்து கொள்ள வேண்டுமே! மேலும் நமது உலகம் மற்றும் மறுமையை சீராக்கிக் கொள்ள வேண்டுமே!

சில மாதங்களுக்கு முன்பு ஏராளமான உலக அரசாங்கங்களின் தலைவர்களுக்கு இதன் பக்கம் கவனமூட்டுவதற்காக கடிதங்கள் எழுதியிருந்தேன். கோவிட்-ஐ அடிப்படையாகக் கொண்டு அவர்களுக்கு புரிய வைக்க முயற்சி செய்திருந்தேன். மேலும் இந்த ஆபத்துகள் தமது உரிமைகளையும் கடமைகளையும் மறந்து அதன்படி செயல்படாததன் காரணமாகவும், இன்னும் சொல்வதென்றால் அநீதிகளில் முன்னேறியதன் காரணமாக இறைவன் புறமிருந்து வருகின்றன. எனவே கவனம் செலுத்துங்கள்! என்று நான் அவர்களுக்கு கவனமூட்டியிருந்தேன்.

இந்த நோயின் காரணமாக ஒவ்வொருவரும் தனிப்பட்ட முறையில் பொருளாதார ரீதியில் மிகவும் தாக்கத்திற்கு உள்ளாகி வருகின்றனர். இன்னும் கூறப்போனால், பெரும் பெரும் பணக்கார அரசாங்கங்களின் பொருளாதாரத்தின் முதுகெலும்பு முறிந்து வருகின்றது. உலகவாதிகளிடத்தில் இதற்கு ஒரேயொரு தீர்வுதான் உள்ளது. இதுபோன்ற நிலை ஏற்பட்டு விட்டால், பின்னர் ஏனைய சிறிய நாடுகளின் பொருளாதாரத்தை அபகரித்துக் கொள்ள வேண்டும். அதற்காக கூட்டணிகள் அமையும்; அமைந்தும் வருகின்றது. பனிப்போர் மீண்டும் ஆரம்பமாகி விடும்; ஆரம்பாகிவிட்டது என்றே தற்போது கூறப்படுகிறது. ஆயுதங்கள் ஏந்தி செய்யப்படும் அசல் போர்கள் அதாவது மிகவும் அபாயகரமான போர் ஏற்படுவதும் தொலைவில் இல்லை. உலகம் இந்த நிலையை அடைவதற்கு முன்பாக நாம் நமது கடமையை ஆற்றியவாறு உலகிற்கு எச்சரிக்கை செய்ய வேண்டும். எனவே நாம் நமது

கடமைகளை இந்த அளவில் செலுத்தக் கூடியவர்களாகும் போது தான் இந்த வருடம் வாழ்த்துகளை கூறுவதற்குரியதாக ஆகும்.

எனவே ஒவ்வோர் அஹ்மதியும் மிகவும் ஆராய வேண்டும். அவரிடம் ஒரு பெரும் பணி ஒப்படைக்கப்பட்டுள்ளது. அதனை செயலாற்றுவதற்கு முதலில் தம்மிடத்தில் அன்பு, நேசம், சகோதரத்துவத்தின் சூழலை உருவாக்க வேண்டும். தனது சமூகத்திலும், அஹ்மதி சூழலிலும் இந்த மாற்றத்தை ஏற்படுத்த வேண்டும். பின்னர் உலகை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் கொடியின்கீழ் கொண்டு வர வேண்டும். அந்த கொடி அல்லாஹ்வின் ஏகத்துவ கொடி ஆகும். அப்போதுதான் நாம் நமது பைஅத்தின் நோக்கத்தில் வெற்றி பெற முடியும். அல்லாஹ் நமக்கு அதற்கான நற்பாக்கியத்தை வழங்குவானாக. ஒவ்வோர் அஹ்மதி ஆணும், பெண்ணும், இளைஞரும், சிறுவரும், முதியவரும் இந்த விஷயத்தை புரிந்தவாறு, இந்த புதிய ஆண்டில் உலகில் ஒரு புரட்சியை ஏற்படுத்துவதற்காக நான் எனது அனைத்து ஆற்றல்களையும் பயன்படுத்துவேன் என்று உறுதிமொழி எடுக்க வேண்டும். ஒவ்வோர் அஹ்மதிக்கும் அல்லாஹ் அதற்கான நற்பாக்கியத்தை வழங்குவானாக.

ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்: பாகிஸ்தான் அஹ்மதிகளையும் அல்ஜஸாயிரின் அஹ்மதிகளையும் உங்களது துஆக்களில் நினைவில் வையுங்கள். பாகிஸ்தானில் சில மவ்லவிகள் மற்றும் அரசாங்க அதிகாரிகள் அநீதிகளின் ஈடுபட்டுள்ளனர். அல்லாஹ் அதுபோன்ற சீர்திருந்தாத மக்களை விரைவில் பிடிப்பதற்குரிய ஏற்பாட்டைச் செய்வானாக. நிச்சயமாக அவனது உதவி வரும்; நிச்சயமாக வரும். அப்போது இந்த உலகவாதிகளான தமது சிந்தனையில் ஆற்றலும் செல்வமும் கொண்டுள்ள மக்களுடைய மண் கூட தென்படாது. எனவே நமது பணி என்னவென்றால், துஆக்களின் மூலம் நமது இறைவணக்கங்களை மேலும் அழகாக்க வேண்டும். நாம் இதை செய்து விட்டால் பின்னரே நாம் வெற்றியாளர்கள் ஆவோம். உலகம் மனித இனத்தின் மாண்புகளை அடையாளங்கண்டு கொள்ளும்போதும் தங்களுக்கிடையிலான வெறுப்புகள் அன்பால் மாறி விடும் போதும் தான் நமக்கு உண்மையான மகிழ்ச்சி ஏற்படும். அல்லாஹ் அந்த மகிழ்ச்சிக்கான ஏற்பாட்டையும் நமக்கு விரைவில் செய்வானாக.

இறைவன் புறமிருந்து தோன்றிய வாக்களிக்கப்பட்ட மஸீஹ் மற்றும் மஹ்தியை ஏற்றுக் கொள்ளக்கூடிய அறிவை அல்லாஹ் முஸ்லிம் சமுதாயத்திற்கு வழங்குவானாக. உலகிற்கு அல்லாஹ் அறிவை வழங்குவானாக. உலகமும் அல்லாஹ் மற்றும் அவனது அடியார்களின் உரிமையை செலுத்துவதன் பக்கம் கவனம் செலுத்துபவர்களாக ஆக வேண்டும். அல்லாஹ் ஒவ்வொரு நாட்டிலும், ஒவ்வோர் அஹ்மதியையும் தனது பாதுகாப்பில் வைப்பானாக. இந்த ஆண்டு ஒவ்வோர் அஹ்மதிக்கும், ஒவ்வொரு மனிதனுக்கும் கருணை மற்றும் பரக்கத்திற்குரிய ஏற்பாட்டை செய்யட்டுமாக. கடந்த ஆண்டுகளில் நம்மிடம் ஏற்பட்ட குறைகளிலிருந்தும் இறைவனின் கோபத்திற்கு ஆளாக்கிய பலவீனங்களிலிருந்தும் சில அருட்கொடைகளிலிருந்து நம்மை விலக்கி வைப்பதற்கு காரணியாக இருந்தவற்லிருந்தும் அல்லாஹ் நம்மை காப்பாற்றுவானாக. மேலும் தனது அருட்களுக்கும், பரிசுகளுக்கும் வாரிசாக்குவானாக. நாம் உண்மையான நம்பிக்கைளார்களாக ஆவோமாக. இந்த துஆக்கள் செய்வதற்கும் அல்லாஹ் நமக்கு நற்பாக்கியம் வழங்குவானாக.

اَلْحَمْدُ لِلّٰهِ نَحْمَدُهٗ وَنَسْتَعِيْنُهٗ وَنَسْتَغْفِرُهٗ وَنُؤْمِنُ بِهٖ وَنَتَوَكَّلُ عَلَيْهِ وَنَعُوْذُ بِاللّٰهِ مِنْ شُرُوْرِ اَنْفُسِنَا وَمِنْ سَيِّئَاتِ اَعْمَالِنَا مَنْ يَّهْدِهِ اللّٰهُ فَلَا مُضِلَّ لَهٗ وَمَنْ يُّضْلِلْهُ فَلَا
هَادِيَ لَهٗ وَنَشْهَدُ اَنْ لَّا اِلٰهَ اِلَّا اللّٰهُ وَنَشْهَدُ اَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ، عِبَادَ اللّٰهِ رحمكم الله اِنَّ اللّٰهَ يَاْمُرُ بِالْعَدْلِ وَالْاِحْسَانِ وَاِيْتَآءِ ذِى الْقُرْبٰى وَيَنْهٰى عَنِ الْفَحْشَآءِ
وَالْمُنْكَرِ وَالْبَغْيِ يَعِظُكُمْ لَعَلَّكُمْ تَذَكَّرُوْنَ اُذْكُرُوا اللّٰهَ يَذْكُرْكُمْ وَادْعُوْهُ يَسْتَجِبْ لَكُمْ وَلَذِكْرُ اللّٰهِ اَكْبَرُ۔

**(தமிழாக்கம்: மவ்லவி அப்துர் ரஹ்மான் தாஹிர்)**